# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1981/44 - 2016 අගෝස්තු මස 24 වැනි බදාදා - 2016.08.24

*1981/44 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

*அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 04/2016*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை அனைவரும் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*எஸ். ஆர். ஆட்டிகல,*
*திறைசேரி பிரதி செயலாளர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 1,*
*2016, ஒகத்து 24.*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*கட்டளை*

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2016, ஒகத்து மாதம் 25 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வருமாறு இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அவ் அட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதத்தில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) அட்டவணை 'அ' இன் ஏற்பாடுகளின் கீழுள்ள முன்னுரிமை வீதமொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படக்கூடியதாக இருக்குமிடத்து அவ்வட்டவணையின் 4ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதத்தில் இறக்குமதித் தீர்வையைக் கோரி அறவிடுமாறு சுங்கப் பணிப்பாளர் தலைமை அதிபதியை, இக்கட்டளை மூலம் வேண்டுகின்றேன்.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 1,*
*2016, ஒகத்து 24.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை

| எச். எஸ். தலைப்பு (1) | எச். எஸ். குறியீடு (2) | | விவரணம் (3) | சுங்கத் தீர்வை முன்னுரிமை (4) | சுங்கத் தீர்வை பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| 22.07 | | | கனவளவிற்கு 80% வீத அல்லது அதற்கு மேற்பட்ட வலுவளவைக் கொண்ட இயல்பிழப்படையாத ஈதல் அற்ககோல்; இயல்பிழப்பு அடைந்த எந்த வலுவளவிலுமுள்ள எதைல் அற்ககோலும் பிற மதுசாரங்களும் | | | |
| | | | | | | |
| | 2207.10 | - | கனவளவிற்கு 80% வீதக் கனவளவு வலுவுடைய அல்லது அதற்கு மேற்பட்ட வலுவுடைய இயல்பிழக்காத ஈதல் அற்ககோல் | | ஒரு லீற்றர் 500 ரூபா | லீ |
| | 2207.20 | - | ஈதைல் அற்ககோலும் பிற மதுசாரங்களும், இயல்பிழந்தவை, எந்த வலுவுடையதாயினும் | | | |
| | 2207.20.10 | --- | மது பரிபால கட்டளைச் சட்டங்களுக்கு இணங்க உருவாக்கப் பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய இயல்பிழந்த மதுசாரங்கள் | | ஒரு லீற்றர் 500 ரூபா | லீ |
| | 2207.20.20 | --- | சிற்றநேல்லா எண்ணையைப் பரிசோதிப்பதற்கு இறக்குமதி செய்யப்பட்ட சிற்றநேல்லா மதுசாரம் விமானங்களில் பனிக் கட்டி அகற்ற உபயோகிப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட கைத்தொழில் மதுசாரங்கள் | | ஒரு லீற்றர் 500 ரூபா | லீ |
| | 2207.20.90 | --- | பிற | | ஒரு லீற்றர் 500 ரூபா | லீ |

9- 531